தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

# ஆண்டு 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

1) **தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறும் நூல்.

அ) புறநாநூறு ஆ) கலித்தொகை
இ) பதிற்றுப்பத்து ஈ) இன்னாநாற்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. இயற்கையாய் நிகழும் நிகழ்ச்சிக்கு எழுத்தாளன் ஒரு கரணியத்தைக் கற்பித்துக் கூறும் அணி

அ) உவமை ஆ) உயர்வுநவிற்சி இ) தற்குறிப்பேற்றம் ஈ) உருவகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தலைவனின் கல்வி, வீரம், கொடை, புகழ் என்பவற்றை விளக்குவது.

அ) புறம் ஆ) அகம் இ) நிலம் ஈ) பொழுது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. புல் + நுனி என்பதைப் புணர்த்தினால்

அ) புல்நுனி ஆ) புற்நுனி இ) புன்னுனி ஈ) புல்லுனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நிலத்தின் மண்ணியல்புக்கும் காலநிலைக்குமேற்ப அங்கு வளரும் மரஞ்செடிகளும் உயிரினங்களும் ______________ என வழங்கப்படும்,

அ) முதற்பொருள் ஆ) உரிப்பொருள்
இ) கருப்பொருள் ஈ) வினைப்பொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. வல்லினமெய்களான க்,ச்,ட்,த்,ப்,ற் என்பவற்றின் இன எழுத்துக் கூட்டம்

அ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் ஆ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள
இ) க,ச.ட,த,ப,ற ஈ) அ,இ,உ,எ,ஒ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. வடவரசரை வென்று இமயவரம்பன் எனப் பெயர் பெற்றவன்.

அ) கனகவிசயன் ஆ) குலோத்துங்கன்
இ) சேரன்செங்குட்டுவன் ஈ) நெடுஞ்செழியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அச்சமின்றி ஆடிப்பாடி மகிழ்வதற்கு வேண்டியது.

அ) பணம் ஆ) குணம் இ) விடுதலை ஈ) மேடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. அன்மொழித்தொகை

அ) கல்நெஞ்சம் ஆ) ஒன்றேகால்
இ) கயல்விழி ஈ) பொற்றொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அறந்தவறியதால் வளைந்த செங்கோலை உயிர் துறந்து நிமிர்த்திய மன்னன்.

அ) சேரலாதன் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) அருண்மொழித்தேவன் ஈ) இராசேந்திரசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. காட்டரண் என்பதைப் பிரித்தெழுதினால்

அ) காடு + அரண் ஆ) காட்டு + அரண்
இ) காட்ட + அரண் ஈ) காட் + அரண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்

அ) ஐந்து ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. முன்னாளில் நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு

அ) இலங்கை ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) ஈழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கட்டுவித்தான் என்பது

அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை
இ) தன்வினை ஈ) பிறவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கவிஞர் கண்ணதாசன் எது தமிழரின் உடைமை என்கிறார்

அ) அறியாமை ஆ) அஞ்சாமை இ) ஈயாமை ஈ) தீண்டாமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

அ) ஐந்திலக்கணம் ஆ) ஐம்பொறி இ) ஐம்பூதங்கள் ஈ) ஐம்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இலெமூரியா என அழைக்கப்பட்ட கண்டம்

அ) ஆசியாக்கண்டம் ஆ) குமரிக்கண்டம்

இ) அமெரிக்கக்கண்டம் ஈ) ஐரோப்பாக்கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஒற்றுமை என்பதைக் குறிக்கும் உவமைத்தொடர்.

அ) புனையா ஓவியம் போல ஆ) அடியற்ற மரம் போல

இ) உடலும் உயிரும் போல ஈ) இலவு காத்த கிளி போல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சேரசோழபாண்டியர் என்பது

அ) அன்மொழித்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) வேற்றுமைத்தொகை ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. எட்டே கால் லட்சணமே! என்று யாரை ஔவையார் கூறினார்?

அ) கம்பரை ஆ) நக்கீரரை

இ) ஒட்டக்கூத்தரை ஈ) விறகுவெட்டியை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. இளையோர் சூடார் வளையோர் கொய்யார் என்று பாடல் இடம்பெற்ற நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) புறநானூறு இ) இயேசுகாவியம் ஈ) பரிபாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டு.

அ) 1815 ஆ) 1833 இ) 1802 ஈ) 1848

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. எதிர்கால இடைநிலைகள்

அ) க்,ச் ஆ) ப், வ் இ) கின்று, கிறு ஈ) ற்,ட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பின்வருவனவற்றுள் முன்னிலைக்கு மட்டும் உரிய வினை.

அ) வியங்கோள்வினை ஆ) ஏவல்வினை இ) தன்வினை ஈ) பிறவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. காலம் காட்டும் இடைநிலைகள் இவற்றுள் அடங்கும்

அ) பெயர்சொற்களில் ஆ) வினைச்சொற்களில்
இ) இடைச்சொற்களில் ஈ) உரிச்சொற்களில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தமிழுக்கே வாழ்வு என்ற பாடலை எழுதிய கவிஞர்

அ) பாவேந்தர் ஆ) காசியானந்தன்
இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. 'பவளம் அன்ன மேனி' இதில் இடம்பெற்றுள்ள இடைச்சொல் வகை

அ) வேற்றுமை உருபு ஆ) இடைநிலை
இ) சாரியை ஈ) உவமை உருபு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மலையும் மலை சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மல்லிகையே வெண்சங்காய் ஊதுவது

அ) பூச்சி ஆ) எறும்பு இ) வண்டு ஈ) குருவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. இங்கு சாலவும் நன்று என்பது

அ) வேற்றுமைத்தொடர் ஆ) உரிச்சொற்றொடர்
இ) எழுவாய்த்தொடர் ஈ) இடைச்சொற்றொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கடைக்கழக அவை கூடியிருக்கிறது. பாண்டிய மன்னன் ஓர் அறிவிப்பை வெளியிட்டான். அஃதாவது என்மனதில் தோன்றியுள்ள ஐயத்தை உணர்ந்து, அதைத் தீர்க்கும்படியான நறுந்தமிழ் பாடல் எழுதும் புலவருக்கு ஆயிரம் பொற்காசுகள் கொண்ட பொற்கிழி பரிசளிக்கப்படும். கழகப்புலவர்கள் தமக்குள் குழம்பிக் கொண்டனர். மன்னனின் மனதிற்குள் உள்ள ஐயத்தை எவ்வாறு உணர்வது? ஒருவராலும் முடியவில்லை. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டான் தருமி எனும் ஏழைப்பார்ப்பான். ஐயோ! ஆயிரம் பொன் ஆயிரம் பொன் என்று புலம்பிக் கொண்டு கோவிலுக்குள் வந்தான். இறைவன் புலவன் உருவத்தில் தருமியிடம் வந்தான்.
"புலவரே! என்ன புலம்பிக் கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான். தருமி செய்தியைச் சொன்னதும் புலவன் உருவிலிருந்த இறைவன் பாண்டியனது ஐயம் தீர்க்கும் பாடலை எழுதிக் கொடுத்தான். தருமி அதைக் கொண்டுபோய்க் கழகத்தில் வாசித்தான். மன்னனது ஐயம் தீர்க்கப்பட்டிருந்தது. அவனது மனைவியின் கூந்தலின் நறுமணம் இயற்கையானது என்பதே அந்தத் தீர்ப்பு. அவைத் தலைவன் நக்கீரன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது, பூக்களை சூடுவதாலேயே பூமணம் கூந்தலோடு இரண்டறக் கலந்து விடுகிறது என்று ஏரணம் செய்து பரிசளிப்பதைத் தடுத்துவிட்டான். தருமி ஓடிப்போய், புலவரான இறைவனை அழைத்து வந்தான். இறைவன் "என்ன குற்றம் கண்டீர் என் பாடலில்?" என்றான். நக்கீரன் பொருட் குற்றம் என்று விடாது ஏரணம் செய்தான். சினம் கொண்ட இறைவன், பாட்டு எழுதியவன் யார் என்பதை உணர்த்த தமது நெற்றிக்கண்ணைக் காட்டினார். இருந்தும் நக்கீரன் தமிழின் மீது கொண்ட பற்றினால் இறைவனை நோக்கி "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று எதிர்த்து நின்றான்.

1. நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறியவர் யார் ?

2. பெண்களின் கூந்தலுக்கு நறுமணம் எவ்வாறு ஏற்படுகிறது என்று கூறப்பட்டது?

3. பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட ஐயம் யாது?

4. ஆயிரம் ஆயிரம் பொன் என்று குழம்பியவன் யார்?

5. பாண்டிய மன்னனின் ஐயத்தை நீக்குபவர்களுக்கு என்ன பரிசு அளிக்கப்படும் என்று மன்னன் அறிவித்தான் ?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. புலப்பெயர்வு என்றால் என்ன?'

2. குமரிக்கண்ட மக்களின் வரலாற்றைக் கூறும் சான்றுகள் எவை என அறிஞர்கள் கருதுகின்றனர்?

3. **குறள் :** பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
   சுருக்கத்து வேண்டு முயர்வு - இக்குறளின் பொருளைத் தருக?

4. சேரன் செங்குட்டுவன் யாருடைய தலையில் கல்லைச் சுமந்து வரச் செய்தான்?

5. தேவநேயப் பாவாணருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் இரண்டினைத் தருக?

6. தமிழ்மேல் ஆணை என்ற பாடல் வரிகளில் இருந்து கவிஞர் காசி ஆனந்தன் பற்றி உமது கருத்து யாது?

___

___

7. கழக இலக்கியங்களில் அகம், புறம் என்று சுட்டப்படுபவை யாவை?

___

___

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடையெழுதுக.

*பட்டமளித்ததுப் பதவி கொடுத்தொரு*
*பக்கம் இழுத்தாலும் - ஆள்வோர்*
*கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்*
*கால்கை பிடித்தாலும் - என்னைத்*
*தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்*
*தோழமை கொண்டாலும் - அந்த*
*வெட்டி மனிதர் உடல்களை*
*மண்மிசை வீழ்த்த மறப்பேனா?*

*பொங்கு வெறியர் சிறைமதிலுள்*
*எனைப் பூட்டி வதைத்தாலும் - என்றன்*
*அங்கம் பிளந்து விழுந்து துடிக்க*
*அடிகள் கொடுத்தாலும் - உயிர்*
*தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்*
*தூள்பட நேர்ந்தாலும் - ஒரு*
*செங்களம் ஆடி வரும் புகழோடு*
*சிரிக்க மறப்பேனா?*

1. பாடலில் 'பொங்கு வெறியர்' என்று கூறப்படுபவர் யார்?

2. 'கால்கை பிடித்தல்' என்றால் என்ன?

3. இப்பாடல் வரிகள் கவிஞரின் எத்தகைய உணர்வினை வெளிபடுத்தி நிற்கின்றன?

4. அங்கம் பிளந்து விழுந்து துடிக்க அடிகள் கொடுத்தாலும் என்ற பாடல் வரிகளில் இருந்து நீர் புரிந்து கொள்வது என்ன?

5. எப்போது சிரிக்க மறப்பேனா என்று கவிஞர் கேட்கிறார்?

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. வேற்றுமைத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. வழுக்கள் எத்தனை வகைப்படும்? திணை வழுவிற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக?

4. கரணிய இடுகுறிப்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

5. இலக்கணரீதியாகச் சொற்கள் எத்தனை வகை? அவை எவை?

(புள்ளிகள் 15)

## 6) பந்தியைத் தமிழ்மொழிக்கு மாற்றுக.

Even before Christ's birth Tamil Eelam areas was controlled by the Tamil kings. In the beginning of fifteenth century the Europeans arrived on Ceylon. There were three kingdoms a Tamil- Jaffna kingdom, a Sinhala kingdom on the coast and a Kandi Sinhala kingdom. The first that arrivedn Ceylon was the Portuguese. Although the British took over the power of Ceylon in eighteen-fifteen, the conquered administrations were ruled in different ways. In eighteen-thirty-three they put together the Tamil and Sinhala kingdoms into one state which they ruled. In nineteen-forty-eight the British gave the power to the Sinhalese and left the island.

Avant même la naissance de l'histoire, la patrie de l'Eelam Tamoul était dirigée par des rois tamouls. Au seizième siècle, les européens sont venus sur l'ile de Ceylan. A cette époque, au Ceylan, il y avait trois royaumes : un royaume tamoul à Jaffna, un royaume cingalais sur la côte (bord de mer) et un royaume cingalais à Kandy. Les premiers qui sont venus à Ceylan sont les Portugais. En mille huit cent quinze, même quand les Anglais se sont emparés de toute l'île de Ceylan, les royaumes étaient gouvernés séparément. En mille huit cent trente trois, ils ont réunifié les royaumes tamoul et cingalais pour gouverner. En mille neuf cent quarante huit, les Anglais sont partis après avoir confié la responsabilité de l'administration aux Cingalais.

Allerede før Kristus fødsel er Tamil Eelam, blevet styret af tamilske konger. I starten af sekstenhundrede tallet kom europæerne til Ceylon. På det tidspunkt var der tre stater på Ceylon. Disse var den tamilske Yaazhppaanam stat, den singalesiske Kyststat og den singalesiske Kandy stat. De første der kom til Sri Lanka, var portugiserne. Selvom englænderne i attenhundrede femten erobrede hele Ceylon, styrede de den tamilske og singalesiske del hver for sig. I attenhundrede treogtredive samlede de den tamilske og singhalesiske del under ét styre. I attenhundrede otteogfyrre gav englænderne styret til singhaleserne og forlod øen.

Die Region Tamil Eelam wurde bereits vor Beginn der Geschichte von tamilischen Kaisern regiert. Zu Beginn des Sechzehnten Jahrhunderts kamen die Europäer nach Ceylon. Zu der Zeit gab es in Ceylon die drei Königreiche, das tamilische Königreich Jazhpanam und die singhalesischen Königreiche Karaijoram und Kandy. Als erstes kamen die Portugiesen nach Ceylon. Auch als Achtzehnhundertfünfzehn die Engländer Sri Lanka übernahmen, wurden die von ihnen erorberten Königreiche einzeln regiert. Im Jahre Achtzehnhundertdreiunddreißig vereinten sie die tamilisch, singhalesischen Königreiche und regierten dort. Die Engländer übergaben im Jahre Neunzehnhundertachtundvierzig die Herrschaft an die Singhalesen und gingen fort .

Tamil Eelam områdene ble allerede før Kristi fødsel styrt av tamilske konger. Ibegynnelsen av femtenhundre-tallet ankom Europeere på Ceylon. Da befant det tre kongedømmer der som var et tamilsk- jaffna kongedømme, et singhalesisk kongedømme ved kysten og et Kandy singhalesisk kongedømme. De første som ankom Ceylon var Portugiserne. Selv om Britene tok over makten over Ceylon i atten-femten, ble de erobrede administrasjonene styrt på hver sin måte. I atten-trettitre satte de sammen de tamilske og singhalesiske kongedømmene til én stat som de hersket. I nitten-førti-åtte overgav Britene makten til Singhaleserne og forlot øya.

(புள்ளிகள் 05)

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **தமிழர் புலப்பெயர்வு**
- **மனித உரிமையும் வன்னிமக்களின் நிலையும்**
- **தேவநேயப்பாவாணர்**
- **இயற்கை அனர்த்தங்களும் (பூமிநடுக்கம், ஆழிப்பேரலை, எரிமலைக்குமுறல், சூறாவளி ) அதனைத் தடுக்கும் வழிகளும்.**

(புள்ளிகள் 20)